# ஆரம்ப சுகாதாரத்தை வலுப்படுத்த இங்கிலாந்துடன் ஒப்பந்தம்

## மத்திய அரசு செயலாளர் தகவல்




இந்தியா - இங்கிலாந்து டயாபடீஸ் மாநாடு சென்னையில் நேற்று தொடங்கியது. இதில் மோகன் நீரிழிவு சிகிச்சை மைய தலைவர் டாக்டர் மோகன், இங்கிலாந்து பேராசிரியர் ஆண்ட்ரு பால்டன், மத்திய சுகாதார அமைச்சக கூடுதல் செயலர் கேசவ் தேசிராஜூ, இங்கிலாந்து சுகாதார அமைச்சர் அன்னா சவ்பிரே, தூதரக அதிகாரி மைக் நிதாவ்ரியா னக்ஸ், மையத்தின் இணை தலைவர் விஜய் விஸ்வநாதன், இந்திய பிரிட்டிஷ் சுகாதார அமைப்பின் நிறுவனர் டாக்டர் ப்ரீத்வி மோகன்தாஸ் பங்கேற்றனர்.

சென்னை, ஜன.19: கிராமங்களில் ஆரம்ப சுகாதாரத்தை வலுப்படுத்துவதற்காக இங்கிலாந்து நாட்டுடன் ஒப்பந்தம் செய்வது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தி வருகிறோம் என்று மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை கூடுதல் செயலாளர் கேசவ் தேசிராஜூ தெரிவித்தார்.

இந்திய- இங்கிலாந்து நாடுகளுக்கு இடையேயான மருத்துவ நுட்ப பரிமாற்றங்களை பலப்படுத்தும் நோக்கத்துடன் கூடிய 'சர்க்கரை நோய் மாநாடு' சென்னையில் நேற்று தொடங்கியது.

இந்த மாநாட்டில் பிரிட்டன் துணைத் தூதரக அதிகாரி மைக் நிதாவ்ரியானக்ஸ், மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறையின் கூடுதல் செயலாளர் கேசவ் தேசிராஜூ, இங்கிலாந்து அரசின் சுகாதார அமைச்சர் அன்னா சவ்பிரே ஆகியோர் கலந்து கொண்டு மாநாட்டை தொடங்கி வைத்தனர். இந்த நிகழ்ச்சிக்கு பிறகு, பத்திரிக்கையாளர் சந்திப்பு நடந்தது.

அப்போது மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை கூடுதல் செயலாளர் கேசவ் தேசிராஜூ கூறியதாவது:

ஆரம்ப சுகாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பாக இரு நாடுகளும் ஒப்பந்தம் செய்ய உள்ளது. இங்கிலாந்தில் உள்ளது போல இந்தியாவிலும் டாக்டர்களுக்கு பயிற்சி அளித்து கிராமங்களுக்கு அனுப்பி பணிசெய்யும் வாய்ப்பு அளிக்கப்படும். கிராமங்களில் ஆரம்ப சுகாதாரத்தை மேம்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும். தமிழ் நாட்டில் பொது சுகாதாரம் நன்றாக இருக்கிறது என்றார்.

இங்கிலாந்து சுகாதார அமைச்சர் அன்னா சவ்பிரே கூறியதாவது:

இங்கிலாந்தைவிட இந்தியாவில் மருத்துவ தொழில் நுட்பம், சிகிச்சை முறைகள் நன்றாகவே உள்ளன. இங்கிலாந்தில் மருத்துவ மனைகள் தவிர நகர்ப்புறம் மற்றும் கிராமங்களுக்கு மருத்துவ சேவைகள் சென்று சேர்வதற்கு வசதியாக நாங்கள் சில குழுக்களை அமைத்துள்ளோம். அரசு மருத்துவர்கள் தவிர மற்ற மருத்துவர்களுக்கு பொதுவான நோய்களுக்கான சிகிச்சை அளிக்கும் பயிற்சி அளித்து அவர்களை கிராமங்களுக்கு சென்று சேவை செய்ய வைக்கிறோம். அதற்காக அவர்களுக்கு அரசே சம்பளம் வழங்குகிறது. அதேபோல நர்சுகளுக்கும் பயிற்சி அளித்து கிராமங்களுக்கு அனுப்புகிறோம். ஆனால் அந்த நர்சுகள் மாத்திரை மருந்துகள் கொடுப்பதை ஒரு பணியாகவே செய்கின்றனர். சேவை மனப்பான்மை, அன்புடன் கூடிய அரவணைப்பு அவர்களிடம் இல்லை என்பது ஒரு குறை. ஆனால் இந்தியாவில் உள்ள நர்சுகள் அப்படி இல்லை. அன்பு அரவணைப்பு காட்டுகின்றனர். இங்கிலாந்து மருத்துவர்கள், நர்சுகளுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கலாம் என்று விரும்புகிறோம். அதேபோல கிராமங்களுக்கு மருத்துவர்களை, நர்சுகளை அனுப்புவது போன்ற திட்டத்தை இந்தியாவில் செயல்படுத்தலாம். இது போன்ற விஷயங்களை பரிமாற்றம் செய்து கொள்வது நல்லது. தெற்கு ஆசியாவில் சென்னை நகரம் மருத்துவ சிகிச்சைக்கான கேந்திரமாக திகழ்கிறது. உலகத் தரம் வாய்ந்த மருத்துவ அறிவு, மருத்துவத்தில் தலைசிறந்தவர்கள் இந்தியாவில் உள்ளதை இப்போதைய பயணத்தில் பார்த்துள்ளேன். இந்த வசதிகளை பரிமாற்றம் செய்து கொள்ள இங்கிலாந்து விரும்புகிறது. இவ்வாறு அன்னா சவ்பிரே கூறினார்.